Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 86 | செவ்வாய்க்கிழமை Tuesday | 27.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## நாட்டின் 77வது குடியரசு தின விழா:

# தேசிய போர் நினைவிடத்தில் பிரதமர் மோடி மரியாதை




டெல்லியில் போர் வீரர்கள் நினைவிடத்தில் பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார்.

போரின்போது நாட்டுக்காக தங்களது இன்னுயிரை தியாகம் செய்த வீ ர ர் க ளை நினைவுகூறும் வகையில்,77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு டெல்லி இந்தியா கேட் பகுதியில் உள்ள போர் வீ ர ர் க ள் நினைவிடத்துக்கு பிரதமர் மோடி சென்றார். அங்கு அவரை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைகளின் தளபதிகள் வரவேற்றனர்.

போர் வீரர்களின் நினைவிடத்தில் மோடி மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.2 நிமிடங்கள் மவுன அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து, குடியரசு தின அணிவகுப்பு நிகழ்ச்சியில் அவர் கலந்துகொண்டார்.

குடியரசு தின விழாவையொட்டி, நாட்டு மக்களுக்கு மோடி குடியரசு தின வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "எனது சக குடிமக்கள் அனைவருக்கும் மனமார்ந்த குடியரசு தின வாழ்த்துகள். இந்தியாவின் மரியாதை, பெருமை மற்றும் மகிமையின் அடையாளமான இந்த மகத்தான தேசிய விழா, உங்கள் வாழ்வில் புதிய ஆற்றலையும், உற்சாகத்தையும் புகுத்தட்டும். வளர்ந்த இந்தியாவிற்கான உறுதிப்பாடு இன்னும் வலுவாக வளரட்டும். இதுவே எனது இதயப்பூர்வமான விருப்பம்" என்றுகூறியுள்ளார்.

## டெல்லி செங்கோட்டையில் தேசியக்கொடியை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஏற்றினார்

டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பங்கேற்றார். 21 குண்டுகள் முழங்க தேசியக் கொ டி பறக்கவிடப்பட்டது. தேசத்தின் வலிமையை பறைசாற்றும் வ கை யி ல் முப்படைகளின் பிரம்மாண்ட அணிவகுப்பு டெல்லியில் நடைபெற்றது.

நாட்டின் 77–வது குடியரசு தின விழா மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. தலைநகர் டெல்லியில் உள்ள கடமைப் பாதையில் பிரம்மாண்ட விழா நடைபெற்றது. குதிரைப் படை சூழ சாரட் வாகனத்தில் விழாவுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, சிறப்பு விருந்தினர்களாக இந்த விழாவில் பங்கேற்ற ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் மற்றும் ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் அன்டோனியோ கோஸ்டா ஆகியோர் வருகை தந்தனர். அவர்களை பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

குடியரசு துணை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், மத்திய அமைச்சர்கள்,தலைமை தளபதி அனில் சவுகான், முப்படை தளபதிகள் இதில் பங்கேற்றனர். இந்த விழாவில் 21 குண்டுகள் முழங்க, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தேசியக் கொடியை பறக்க விட்டார். அப்போது தேசிய கீதம் இசைக்கப்பட்டது.





தொடர்ந்து பல்வேறு மா நி ல ங் க ளை இசைக்க கலைஞர்கள் பங்கேற்ற அணிவகுப்பு நடைபெற்றது. பின்னர் ராணுவம், கடற்படை, விமானப் படை, சிஆர்பிஎஃப் படை வீரர்கள், என்சிசி, என்எஸ்எஸ் படை அணிவகுத்தன. பின்னர் மத்திய அரசின் 13 துறைகள் மற்றும் 17 மாநிலங்களின் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் பங்கேற்றன.

இதில் 'ஆபரேஷன் சிந்தூர்' ராணுவ நடவடிக்கையின் போது பாதுகாப்பு படையினர் பயன்படுத்திய பிரதான ஆயுத அமைப்பின் மாதிரி வடிவங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

குடியரசு தினவிழாவை முன்னிட்டு டெல்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு பணியில் 30,000 போலீஸார் ஈடுபட்டுள்ளனர். ஏஐ தொழில்நுட்பத்தின் உ த வி யு ட ன் கண்காணிப்பு பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது

# குடியரசு தினவிழா: மெரினா கடற்கரையில் கவர்னர் ஆர்.என்.ரவி தேசியக்கொடி ஏற்றினார்



சென்னை,

நாட்டின் 77–வது குடியரசு தினவிழா (திங்கட்கிழமை) கொண்டாடப்படுகிறது. தமிழக அரசு சார்பில் மெரினா கடற்கரையில் உழைப்பாளர் சிலை அருகே குடியரசு தின விழா கோலாகலமாக நடைபெற்றது.

அதற்காக உழைப்பாளர் சிலை பகுதியில் பிரமாண்டமான அளவில் பந்தல்கள் போடப்பட்டுள்ளன. அங்கு சபாநாயகர், அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதி, நீதிபதிகள், வெ ளி நா ட் டு தூதுவர்கள் உள்பட பல முக்கிய பிரமுகர்கள் அ ம ர் ந் தி ரு ந் த ன ர். காலை 7.55 மணிக்கு விழாப் பகுதிக்கு முதல்–அ மை ம ச் ச ர் மு.க.ஸ்டாலின் வந்தார். அவர், காரின் முன்னும் பின்னும் போலீசாரின் மோட்டார் சைக்கிள்கள் புடைசூழ அழைத்து வரப்பட்டார். அந்த பகுதியில் கூடி நிற்கும் பொதுமக்களுக்கும், விழா பந்தலில் அமர்ந்திருக்கும் பார்வையாளர்களுக்கும் அவர் கையசைத்து வாழ்த்து தெரிவித்தார்.

பின்னர் அணிவணக்கம் ஏற்கும் மேடை அருகே வந்த முதல்–அமைச்சரை தலைமைச் செ ய ல ா ள ர் முருகானந்தம் வரவேற்றார்.

காலை 7.58 மணிக்கு கவர்னர் ஆர்.என்.ரவி, மனைவி லட்சுமி ரவியுடன் வந்தார். அவர், வி மா ன ப் ப டை யி ன ர் மோட்டார் சைக்கிள்கள் புடைசூழ அழைத்து வரப்பட்டார். அவரும் பொதுமக்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு கையசைத்து வாழ்த்து தெரிவித்தார். அதைத் தொடர்ந்து, 7.58 மணிக்கு அணி வணக்கம் ஏற்கும் மேடைக்கு அருகே வந்த கவர்னர் ஆ ர் . எ ன் . ர வி யை, மு த ல் – அ மை ம ச் ச ர் மு.க.ஸ்டாலின் பசுமை கூடை வழங்கி வரவேற்றார். பின்னர், தென்னிந்திய பகுதிகளின் ராணுவ மேஜர் ஜெனரல், கடற்படை அதிகாரி, தாம்பரம் வான்படை நிலைய தலைமை அதிகாரி, கடலோர காவல்படை (கிழக்கு) கமாண்டர், தமிழக டி.ஜி.பி., சென்னை போலீஸ் கமிஷனர், கூடுதல் டி.ஜி.பி. (சட்டம் ஒழுங்கு) ஆகியோரை கவர்னருக்கு சம்பிரதாயப்படி மு த ல் – அ மை ச் ச ர் மு.க.ஸ்டாலின் அறிமுகம் செய்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு அங்கிருக்கும் கம்பத்தில் தேசியக் கொடியை கவர்னர் ஆர்.என்.ரவி ஏற்றிவைத்தார். அப்போது அந்தப் பகுதியின் மேல் இந்திய விமானப்படை ஹெலிகாப்டர் பறந்து வந்து மலர் தூவப்பட்டது. அந்த நேரத்தில் தேசிய கீதம் இ சை க் க ப் ப ட் ட து. 5–வது முறையாக கவர்னர் தேசியக் கொடியை ஏற்றி வைத்துள்ளார். பின்னர் ராணுவ படைப்பிரிவு, கடற்படைப் பிரிவு, ராணுவ கூட்டுக்குழல் முரசிசை பிரிவு, வான்படை பிரிவினர் அணிவகுத்து வந்து கவர்னருக்கு வணக்கம் செலுத்தினர். அதை அவர் ஏற்றுக்கொண்டார்.

அப்போது, கடற்படை ஊர்தியில் போர்க் கப்பலின் சிறிய வடிவம், வான்படை ஊர்தியில் சிறிய வடிவிலான விமானம், கடலோர காவல்படை ஊர்தியில் சிறிய வடிவிலான படகுகள் ஆகியவை அணிவகுத்து கொண்டு வரப்பட்டன. சி.ஐ.எஸ்.எப்., சி . ஆ ர் . பி . எ ப் ., ஆர்.பி.எப்., தமிழ்நாடு சிறப்பு காவல் பிரிவு, தமிழ்நாடு பேரிடர் நிவாரணப்படை, கடலோர பாதுகாப்புக்குழு, ஊர்க்காவல் படை (ஆண்கள் மற்றும் பெண்கள்) உள்பட 30 படைப்பிரிவினர் அணிவகுத்து சென்றனர். அதன்பின்னர் அணி வகுப்பு மேடைக்கு வந்த மு த ல் – அ மை ச் ச ர் மு.க.ஸ்டாலின் பதக்கங்களை வழங்கினார். வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், சி . நா ர ா ய ண ச ா மி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது, காந்தியடிகள் காவலர் பதக்கங்கள், சிறந்த போலீஸ் நிலையத்திற்கான கோப்பைகள் ஆகியவற்றை உரியவர்களுக்கு முதல்–அமைச்சர் வழங்கினார்.

பின்னர், பதக்கம் பெற்றோர் குழுவாக முதல்–அமைச்சருடன் புகைப்படம் எடுத்துக்கொ ண்டனர். அதைத்தொடர்ந்து அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடைபெற்றது. செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் மங்கள இசை ஊர்தி உள்பட பல்வேறு அரசுத்துறைகளின் ஊர்திகள், விவரிக்கும் வகையிலான வடிவமைப்புகளுடன் வலம் வந்தன. அதற்கு முன்னதாக, பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளின் பாரம்பரிய நாட்டியம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# தங்கம் விலை அதிரடி உயர்வு... கிராம் ரூ.15 ஆயிரத்தை கடந்து புதிய உச்சம்



சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,200 அதிரடியாக உயர்ந்துள்ளது. இதன் மூலம் ஒரு சவரன் தங்கத்தின் விலை ரூ.1,20,200 என்ற புதிய வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது.

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று ராக்கெட் வேகத்தில் உயர்ந்து, சாமானிய மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. புத்தாண்டு தொடங்கியது முதலே ஏறுமுகத்தில் இருந்த தங்கம் விலை, புதிய வரலாற்று உச்சத்தைத் தொட்டுள்ளது.

கடந்த ஒரு வாரமாகவே தங்கம் மற்றும் வெள்ளி விலைகள் போட்டிப்போட்டுக் கொண்டு உயர்ந்து வருகின்றன. நேற்று முன்தினம் ஒரே நாளில் சவரனுக்கு ரூ.1,600 உயர்ந்த நிலையில், இன்று (ஜனவரி 26) மேலும் அதிரடியாக சவரனுக்கு ரூ.2,200 உயர்ந்துள்ளது. இதன் மூலம், சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கம் ஒரு சவரன் ரூ.1,20,200–க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிராம் தங்கத்தின் விலை முதன்முறையாக 15 ஆயிரம் ரூபாயைத் தாண்டி, ரூ.15,025–க்கு விற்பனையாகிறது.

**வெள்ளிவிலையிலும் பெரும் அதிரடி**

தங்கத்தைப் போலவே வெள்ளி விலையும் இன்று கட்டுக்கடங்காமல் உயர்ந்துள்ளது. கிராமுக்கு ரூ.10 உயர்ந்து, ஒரு கிராம் வெள்ளி ரூ.375–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கட்டி வெள்ளி விலை கிலோவுக்கு ரூ.10,000 முதல் ரூ.20,000 வரை அதிகரித்து, ஒரு கிலோ ரூ.3,75,000 என்ற வரலாறு காணாத நிலையை எட்டியுள்ளது. மற்ற தர தங்கத்தின் விலை நிலவரம்:

24 காரட் சுத்த தங்கம்: இதன் விலை ஒரு சவரன் ரூ.1,31,128 என்ற பிரம்மாண்ட நிலையை எட்டியுள்ளது.

18 காரட் தங்கம்: முதன்முறையாக சவரன் ரூ.1,00,000 என்ற இலக்கைத் தொட்டுள்ளது.

**விலை உயர்வுக்கான பின்னணி காரணங்கள்**

தங்கம் விலை ஏன் ராக்கெட் வேகத்தில் உயர்கிறது என்பதற்குப் பின்னால் சர்வதேசப் பொருளாதாரம் மற்றும் அரசியல் சூழல்கள் காரணமாக உள்ளன:

ஈரான், வெனிசுலா மற்றும் உக்ரைன்–ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இடையே நிலவும் பதற்றமான போர்ச் சூழல் உலகப் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பங்குச் சந்தையில் நிலவும் நிலையற்ற தன்மையால், பாதுகாப்பான முதலீடாகக் கருதப்படும் தங்கத்தின் மீது சர்வதேச முதலீட்டாளர்கள் பெரும் தொகையைக் குவித்து வருகின்றனர்.

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 91.63 என்ற வரலாறு காணாத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இது இறக்குமதி செய்யப்படும் தங்கத்தின் விலையைத் தானாகவே உயர்த்துகிறது.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சியில் 77 வது குடியரசு தினத்தை முன்னிட்டு மேயர் முத்துத்துரைக்கு உடல் நலம் சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால்துணைமேயர்குணசேகரன்தேசியக்கொடியை ஏற்றி வைத்து கொடி வணக்கம் செலுத்தினார் இதில் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் அரசு அதிகாரிகள் முன்னாள் அமைச்சர் தென்னவன் ஆகியோர் பங்கேற்றனர்.

# செட்டிநாடு பப்ளிக் பள்ளியில் 77வது குடியரசு தின விழா சிறப்பாக நடைபெற்றது



காரைக்குடி அருகே மானகிரியில் அமைந்துள்ள செட்டிநாடு பப்ளிக் பள்ளியில் 77-வது இந்திய குடியரசு தின விழா தேசிய உணர்வுடன்சிறப்பாககொண்டாடப்பட்டது.

விழாவில் பள்ளி முதல்வர் திருமதி உஷா குமாரி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பள்ளியின்தலைவர்திரு. எஸ். பி. குமரேசன், அவர்கள் முன்னிலை வகித்தார். அவர் பேசுகையில் இந்திய அரசியலமைப்பின் முக்கியத்துவம், ஜனநாயகத்தின் மதிப்பு மற்றும் மாணவர்கள் நாட்டின் பொறுப்பான குடிமக்களாக வளர வேண்டிய அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக திருச்சிராப்பள்ளி NCC குழு தலைமையகத்தின் பயிற்சி அதிகாரி லெப்டினன்ட் கர்னல் திலீப் சிங் நாத்வத்கலந்துகொண்டு, மாணவர்களிடம் தேசப்பற்று, ஒழுக்கம், தன்னம்பிக்கைமற்றும்நாட்டுக்கான சேவை குறித்து ஊக்கமளிக்கும் உரையாற்றினார்.

நாட்டின் பாதுகாப்பிற்காக அயராது பணியாற்றும் ஆயுதப்படைகள், காவல் துறை மற்றும் துணை இராணுவப் படையினருக்கு விழாவில் மரியாதை செலுத்தப்பட்டது. அவர்களின் தியாகங்களே இந்தியாவின்பெருமைக்குஅடையாளம் என குறிப்பிடப்பட்டது.

விழாவை முன்னிட்டு மாணவர்கள் தேசப்பற்று மிக்க பண்பாட்டு கலை நிகழ்ச்சிகள்,நாட்டுப்புற நடனம், தேசபக்தி பாடல்கள் மற்றும் நாடக நிகழ்ச்சிகளை சிறப்பாக அரங்கேற்றினர்.

துணைத்தலைவர்திரு. கே. அருண் குமார் குடியரசு தின வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டார்.

விழாவின் நிறைவில், பள்ளி துணை முதல்வர் திருமதி பிரேமசித்ரா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

# மதுராந்தகம் சட்டமன்ற அலுவலகத்தில் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை



மதுராந்தகத்தில் 77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற அலுவலகத்தில் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் அவர்கள் அலுவலகத்தில் உள்ள தேசிய கொடி கம்பத்தில் தேசிய கொடி ஏற்றி வைத்து மரியாதை செய்தார் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் மற்றும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் மதுராந்தகம் நகர கழக செயலாளர் பூக்கடை கே சி சரவணன், மதுராந்தகம் நகர அம்மா பேரவை செயலாளர் வழக்கறிஞர் எம்.பி. சீனிவாசன், மதுராந்தகம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் முதுகரை கார்த்திகேயன், கருங்குழி பேரூர் கழக செயலாளர் ஆர்.டி .ஜெயராஜ், மதுராந்தகம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வையாவூர் வி.ஜி .குமரன், மற்றும் அதிமுக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கேளம்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஊராட்சி மன்ற தலைவர் ராணி எல்லப்பன் தேசியகொடி ஏற்றினார்



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த கேளம்பாக்கம் ஊராட்சியில் குடியரசு தினத்தை விழா முன்னிட்டு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் கேளம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ராணி எல்லப்பன், கொடியேற்றி இனிப்புகள் வழங்கினார், உடன் வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்,



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (26.01.2026) 46 புதூர், ஆனக்கல்பாளையம், ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில், காவல் துறையில் சிறப்பாக பணியாற்றிய காவல்துறை அலுவலர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ. சுஜாதா, மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி உட்பட பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரியில் குடியரசு நாள் விழா நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். அதன் பின்னர் காவல் துறையினர் மரியாதையையும் அவர் ஏற்றார். தொடர்ந்து பல்வேறு அரசு துறை சார்பில் 53 பயனாளிகளுக்கு ரூபாய் 2.51 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதனை அடுத்து சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் சமாதான புறாக்களையும் ஆட்சியர் பறக்க விட்டார். அதன் பின்னர் பல்வேறு அரசு துறைகளில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு பாராட்டு சான்றிதழையும் அவர் வழங்கினார். அந்த வகையில் சிறந்த எஸ்.ஐ.ஆர். பணிக்கான பாராட்டு சான்றிதழ் போச்சம்பள்ளி வட்டாட்சியர் அருள் அவர்களுக்கு வழங்கப்பட்டது.



கிருஷ்ணகிரியில் குடியரசு நாள் விழா நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். அதன் பின்னர் காவல் துறையினர் மரியாதையையும் அவர் ஏற்றார். தொடர்ந்து பல்வேறு அரசு துறை சார்பில் 53 பயனாளிகளுக்கு ரூபாய் 2.51 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதனை அடுத்து சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் சமாதான புறாக்களையும் ஆட்சியர் பறக்க விட்டார். அதன் பின்னர் பல்வேறு அரசு துறைகளில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு பாராட்டு சான்றிதழையும் அவர் வழங்கினார். அந்த வகையில் பர்கூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட புளியம்பட்டி ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து வரும் சிவசங்கர் சிறந்த ஊராட்சி செயலாளருக்கான பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

# தூத்துக்குடியில் பகுதி சபா கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி பங்கேற்பு





தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் ஒவ்வொரு வார்டு பகுதிகளிலும் 5 பகுதி சபா உறுப்பினா்கள் தோ்வு செய்யப்பட்டு அந்த பகுதியில் உள்ள பொதுமக்களின் கோரிக்கைகள் குறைபாடுகளை பகுதி சபா கூட்டம் நடைபெற்றது.

மொழிப்போர் தியாகிகள்தினத்தைமுன்னிட்டு தியாகிகளின் திருவுருவ படத்திற்கு மேயர் ஜெகன் பெரியசாமி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்துதூத்துக்குடி மாநகரபகுதியான20வது வார்டு மற்றும் 39வது வார்டு சிவன் கோயில் அருகிலுள்ள மாநகராட்சி திருமண மண்டபத்தில் நடைபற்ற பகுதி சபா கூட்டம் இன்று நடைபெற்றது கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி கலந்து கொண்டு உரையாற்றினார்.

கூட்டத்தில் மேயா ஜெகன் பொியசாமி கூட்டத்தில் பேசுகையில் திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க மாநகராட்சி நிா்வாகத்திற்கு உள்ளாட்சி பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டபின் 46 மாத காலத்தில் 60 வாா்டுகளிலும் பொதுமக்கள் நலன் கருதி அனைத்து பணிகளும் பாரபட்சமின்றி நடைபெற்று வருகிறது. இதற்கிடையில் மாதம் ஒருமுறை நடைபெறும் மாநகராட்சி கூட்டத்திலும் மாமன்ற உறுப்பினா்கள்கோரிக்கையை நிறைவேற்றும் இடத்தில் இருந்து நான் உள்பட அதிகாாிகள் அலுவா்கள் பணியாற்றி வரும் நிலையில் 21 மாத காலமாக நான்கு மாநகராட்சி மண்டல அலுவலகங்களிலும் புதன்கிழமை தோறும் குறைதீர்க்கும் முகாமும் நடைபெறுகிறது. மேலும் தற்போது 60 வாா்டுகளிலும் பகுதி சபா கூட்டம் நடைபெறுவதின் மூலம் அரசாங்கத்தை தேடி அலுவலகங்களுக்கு சென்ற நிலை மாறி மக்களை தேடி சென்று குறைகளை கேட்டறிந்து தீர்க்கும் நிலை திமுக ஆட்சியில் தளபதியாா் வழியில் நடைபெற்று கொண்டிருக்கிறது.

இந்த பகுதி ஆன்மீகம் நிறைந்த பல போக்குவரத்துக்கள் உள்ளடக்கிய பகுதியாகும் தெப்பக்குளத்தில் மேலும் சிறப்பு செய்யும்வகையில்பணிகளை மேற்கொண்ட போது ஏற்பட்ட அந்த குறைபாடுகளைநிவா்த்திபன்னுவதற்கு முன்பாகவே டைல்ஸ் பதிக்கப்பட்டு நான்குபுறமும் பொதுமக்கள் பக்தா்கள் நடந்து சென்று சிறுவா்கள் பொழுது போக்கு அம்சத்துடன் பணிகளை துவக்கினோம் அப்போது ஏற்பட்ட சிறு குறைபாடுகள் வல்லுநா்களின் கருத்துக்கேற்ப பழமை மாறாமல் அத்திட்டத்தை முடித்து கொடுப்பதற்கு மாநகராட்சி நிா்வாகமும் முன்னெடுத்து வருகிறது. ஏற்கனவே கொரோனா காலத்தில் தெப்பதிருவிழா நடைபெறாத நிலை ஏற்பட்டது அது போன்று இப்போதும் அறநிலைத்துறையினா் ஆலோசனை படி பணிகள் நடைபெறும் நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டுள்ளது. அதை தீா்க்கும் வகையில் சாலைகளில் பல்வேறு விாிவாக்கங்களை செய்துள்ளோம். மாநகராட்சி பகுதி முழுவதும் சிறுவா்கள் முதல் முதியோா்கள் வரை மகிழ்ச்சியோடு வந்து செல்வதற்கு வசதியாக முத்துநகா் கடற்கரை உள்ளிட்ட பல புதிய பூங்காக்கள் பல்வேறு விளையாட்டுகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் சண்முகபுரம் பகுதி மிகவும் பழமையான பகுதியாகும் 60 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட கால்வாய்கள் பல உள்ளன அதில் சில இடங்களில் புதிதாக கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. வளர்ச்சி ஒன்று தான் குறிக்கோள் என்று எல்லோரும் எதிர்கால தலைமுறையினா் நலனை கருத்தில் கொண்டு இணைந்தே பணியாற்றுவோம் என்று மேயர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையர் பிரியங்கா, வட்ட கழக செயலாளரும் முன்னாள் மாமன்ற உறுப்பினருமான ரவீந்திரன், பகுதி கழக செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான சுரேஷ்குமார், பகுதி சபா உறுப்பினர் ஜசக், மாவட்ட பிரதிநிதி நாராயணன், தொண்டரணி சரவணன், போல்பேட்டை பிரதிநிதி பிரபாகர் மற்றும் பொதுமக்கள் உட்பட பல கலந்து கொண்டனர்.





சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் பள்ளி தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கி கொடி ஏற்றி பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார் . ராமநாதபுரம் மாவட்டம் ராஜசிங்கமங்கலம் வட்டார கல்வி அலுவலக கண்காணிப்பாளர் செல்வம் முன்னிலை வகித்தார்.ஆசிரியர்களுக்கும்,பெற்றோர்களுக்கும் சாக்லேட் தவிர்த்து கடலை மிட்டாய் இனிப்பு வழங்கப்பட்டது.





இந்திய திருநாட்டின் 77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு, சிவகங்கை மாவட்ட தமிழக மக்கள் உரிமை களம்சார்பாகமாவட்டமாணவரணிசெயலாளர்ஜெயந்தன் முன்னேற்பாட்டில் சிவகங்கை யூனியன் கிளப்பில் விளையாடி வரும் வாலிபால் விளையாட்டு வீரர்களுக்கு கைப்பந்து மற்றும் வலை உள்ளிட்டவற்றை தமிழக மக்கள் உரிமை களம் நிறுவனத் தலைவர் மணிவண்ணன் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கினார். அதேபோல் சிவகங்கைஐவர்கால்பந்தாட்டமைதானத்தில்விளையாடி வரும் விளையாட்டு வீரர்களுக்கு கால் பந்து வழங்கினார். இந்நிகழ்வில் தமிழக மக்கள் உரிமை களத்தின் மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.


# மானாமதுரை நகராட்சி அலுவலகத்தில் குடியரசு தின விழாவில் தேசிய கொடியேற்றிய ஆணையாளர்



இந்திய திருநாட்டின் 77-வது குடியரசு தின விழாவை முன்னிட்டு மானாமதுரை நகராட்சி அலுவலகத்தில் மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி தலைமையிலும், நகர் மன்ற துணை தலைவர் பாலசுந்தர் முன்னிலையிலும், மூவர்ண இந்திய தேசிய கொடியை நகராட்சி ஆணையாளர் கோபாலகிருஷ்ணன் ஏற்றி, குடியரசு தின வாழ்த்துக்கள் தெரிவித்து, அனைவருக்கும் தெரிவித்தார். முன்னதாக தேசப்பிதா மகாத்மா காந்தி உருவப்படத்திற்கு அனைவரும் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து "தூய்மையாக இருப்போம் நோயின்றி வாழ்வோம், என் நகரத்தை தூய்மையாகவும்,சுத்தமாகவும் வைத்திருப்பது எனது கடமையும்,பொறுப்பும் ஆகும், தூய்மை பணிகளுக்கு என்னை அர்ப்பணித்துக் கொள்ள, நேரத்தை ஒதுக்குவேன், ஆபத்தான தொற்று நோய்களில் இருந்து நம்மையும், நமது குடும்பங்களையும் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். திறந்தவெளியில் மலம் கழிப்பதை தவிர்த்து நோய் தொற்றிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வோம், கழிப்பறை பயன்படுத்திய பின் சோப்பை கொண்டு கைகளை நன்றாக கழுவுவோம், என்னால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொருநடவடிக்கையும்என் நகரத்தை தூய்மையாக வைக்க பேருதவி செய்யும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன், தண்ணீரை அப்படியே பருகாமல் காய்ச்சி பருகுவேன் கழிவறையை மட்டுமே பயன்படுத்துவேன் பொது இடங்களில் தண்ணீர் தேங்குவதை தவிர்த்து கொசுக்களின் உற்பத்தியை குறைப்பேன்" என்றஉறுதி மொழியையும் அனைவரும் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் நகர் மன்ற உறுப்பினர், நகராட்சி அலுவலர்கள், துப்புரவு தூய்மை பணியாளர்கள், திமுககட்சிநிர்வாகிகள் மற்றும்பொதுமக்கள் கலந்து கொண்டனர்



இந்திய திருநாட்டின் 77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு மானாமதுரைவைகைகட்டிட பொறியாளர்கள் சங்கத்தின் சார்பாக சங்கத் தலைவர் ஆனந்த கார்த்திக் தலைமையில்மூவர்ணஇந்தியதேசியகொடிஏற்றப்பட்டு, குடியரசு தின வாழ்த்துக்கள் தெரிவித்து, அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்திய தேசிய உறுதிமொழி மற்றும் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்து கட்டிட பொறியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில நிர்வாகிகள், வைகை கட்டிட பொறியாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே.ஜே. பிரவீன் குமார், இ.ஆ.ப., அவர்கள் மதுரைமாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், கீழமாத்தூர் கிராமத்தில் குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் இன்று(26.01.2026) சிறப்பு பார்வையாளராக பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட சமுத்துவ விருந்தில் பொதுமக்களுடன் கலந்துகொண்டார்.

# TCBC மேற்கு மண்டலம் CMN ஷட்டில் கிளப் இணைந்து நடத்தும் 7 மாவட்ட குழந்தைகள் பேட்மின்டன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் கீதாஜீவன் பரிசுகளை வழங்கினார்




தூத்துக்குடி மாநகராட்சி பேட்மின்டன் நீதிமன்றம் மேற்கு மண்டலம் CMN ஷட்டில் கிளப் இணைந்து நடத்தும் 7 மாவட்ட குழந்தைகள் பேட்மின்டன் போட்டி அசோக் நகர் 2வது தெருவில் பேட்மின்டன் போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கான தூத்துக்குடி, திருநெல்வேலி தென்காசி கன்னியாகுமரி விருதுநகர் மதுரை தேனி 7 மாவட்ட அளவிலான பேட்மின்டன் போட்டியில் பல்வேறு அணிகள் பங்கேற்றன.

போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் கோப்பை மற்றும் பரிசு தொகையை வழங்கினார்.

இந்நிகழ்ச்சி 34வது வார்டு காங்கிரஸ் மாமன்ற உறுப்பினர் சந்திரபோஸ் ஏற்பாடு அனைத்தும் செய்திருந்தார்.

நிகழ்ச்சியில் TTDBA தலைவர் வேல் சங்கர், TTDBA செயலாளர் லட்சுமணன், ஞானராஜன் எஸ்.ஐ,கே.டி.எம் மற்றும் சன்ஸ் ரஞ்சித்குமார், பாரத்மாதா போக்குவரத்து எம்.கே.பிரதீப், கிரி பில்டர்ஸ் சுரேஷ், இன்ஜினியரிங் பில்டர்ஸ் ஷேல்டன், CMN கிளப் பாய்ஸ் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு ஜவஹர் இல்லத்தில் காங்கிரஸ் கட்சியினரின் எழுச்சியான குடியரசு தின விழா: தேசியக்கொடி ஏற்றி இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



ஜனவரி 26 நேற்று நாட்டின் 77-வது குடியரசு தினத்தை முன்னிட்டு, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் இன்று காலை 9:30 மணிக்கு மாவட்ட காங்கிரஸ் அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் மிகச் சிறப்பான முறையில் விழா கொண்டாடப்பட்டது.

தலைமை மற்றும் முன்னிலை:

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி, தேசியக்கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்விற்கு மொடக்குறிச்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினருமான ஆர்.எம். பழனிசாமி, முன்னாள் மாவட்ட தலைவர் டி.திருச்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் குப்பண்ணா சந்துரு அனைவருக்கும் இனிப்புகளை வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

பங்கேற்ற முக்கிய நிர்வாகிகள்:

இந்த விழாவில் காங்கிரஸ் கட்சியின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகப் பங்கேற்றனர்.

அவர்களின் விவரம் வருமாறு:

மண்டல தலைவர்கள்: மாமரத்து பாளையம் எஸ். கோபி, ஆர். விஜயபாஸ்கர், சூரம்பட்டி சாம்ராட் அசோக், எச்.எம். ஜாபர் சாதிக். மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள்:

மாவட்ட துணைத் தலைவர் கே. புனிதன், பாபு (எ) வெங்கடாஜலம், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ. மாரியப்பன், எம். ஞான தீபம்.

பொதுச் செயலாளர்கள்: டி. கண்ணப்பன், வி.கே. சச்சிதானந்தம், கராத்தே யூசுப்.

முன்னாள் வட்டாரத் தலைவர் எம். செல்வராஜ்.

துறை ரீதியான தலைவர்கள்: தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை துறை மாநில முதன்மை துணைத் தலைவர் எம். ஜவஹர் அலி, தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (டி.சி.டி.யு) துணைத்தலைவர் குளம் எம். ராஜேந்திரன், தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆரிப் அலி. அணி நிர்வாகிகள்: ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப்பிரிவு தலைவர் ம. முகமது அர்சத், சிறுபான்மை துறை மாவட்ட துணைத் தலைவர் கே.என். பாஷா, மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் சித்தோடு எஸ்.பிரபு. சதாம் உசேன், ஆட்டோ ராஜா, சிட்டி கல்கி, வசந்த்.

முன்னாள் பிரதிநிதிகள்:

முன்னாள் மாமன்ற உறுப்பினர் கை சுப்பிரமணியம், முன்னாள் எஸ்.சி. மாவட்ட தலைவர் கே.பி. சின்னசாமி.

மகளிர் அணி மற்றும் இதர நிர்வாகிகள்:

ஈரோடு பாராளுமன்ற மகிளா காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர் ஆர். கிருஷ்ணவேணி, ஈரோடு மாநகர் மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி அன்னபூரணி, புவனேஸ்வரி, செல்வி ரவி மாவட்ட நிர்வாகிகளான கே.ஜே. டிட்டோ, பெரியார் நகர் சூரஜ், வேன் ராமசாமி, சூரம்பட்டி விஜயகுமார், விஜயராகவன், காளிங்கராயன் பாளையம் சரவணன், சூரம்பட்டி பிரகாஷ், நடராஜ் செட்டியார், ஜே. சதீஷ், சூரம்பட்டி திருவேங்கடம், செங்கோடம்பள்ளம் பாஸ்கரன், வள்ளிபுரத்தான் பாளையம் எஸ். தங்கவேலு, நல்லி செல்வம், வாட்டர் சிவாஜி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், கனி ராவுத்தர் குளம் சபீர் அகமது, நூருதீன், கனி ராவுத்தர் குளம் பிரபு, சிந்தன் நகர் மாடசாமி, கிருஷ்ண மூர்த்தி, சண்முகம், மாதேஷ், மகேஷ், வசந்த், இளைஞர் காங்கிரஸ் நிர்வாகி தினகரன், நரிப்பள்ளம் ரவிச்சந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் இவ்விழாவில் பங்கேற்று சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி பொருளாளர் வெத்தலை மோகன்ராஜ் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். தேசப்பற்று மிக்க முழக்கங்களுடன் விழா இனிதே நிறைவடைந்தது.




# திருப்பரங்குன்றம் சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் தெப்பத் திருவிழா எட்டாம் நாள் நிகழ்ச்சி

## நடராஜர் சுவாமி சிவகாமி அம்மன் விடையாத்திசப்பரத்தில் புறப்பாடாகி வீதி உலா நடைபெற்றது

நாட்டின் 77 வது குடியரசு தின விழாவை முன்னிட்டு திருப்பரங்குன்றம் கோவில் கோபுரத்தில் கோவில் நிர்வாகம் சார்பில் ஏற்றப்பட்ட தேசிய கொடி பட்டொளி வீசி பறந்தது

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் முதற்படை வீடான திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் தெப்பத் திருவிழா கடந்த 19ஆம் தேதி தொடங்கி வெகு விமர்சையாக நடைபெற்று வருகிறது. விழாவின் எட்டாம் நாள் நிகழ்ச்சியாக இன்று அருள்மிகு நடராஜர் சுவாமியும் சிவகாமி அம்மனும் சர்வ அலங்காரத்தில் கோவில் திருவாச்சி மண்டபத்தில் எழுந்தருளினர். அங்கு சிறப்பு தீபாரதனை நடைபெற்றது.

தொடர்ந்து நடராஜர் சுவாமியும் சிவகாமி அம்மனும் விடையாத்திச்சப்புறத்தில் திருப்பரங்குன்றம் முக்கிய ரத வீதிகளில் வீதி உலா சென்று பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நாளை மறுநாள் (28.1.26) அன்று மாலை திருப்பரங்குன்றம் ஜிஎஸ்டி சாலையில் உள்ள தெப்பத்தில் சுவாமி எழுந்தருளி அங்கு தெப்பம் திருவிழா நடைபெறும்.

முன்னதாக நாட்டின் 77 வது குடியரசு தின விழாவை முன்னிட்டு திருக்கோவில் கோபுரத்தில் தேசியக்கொடி கோவில் நிர்வாகம் சார்பில் ஏற்றப்பட்டது.

# ஈரோடு பெருந்துறை திருவாச்சி ஊராட்சி, மாதம்பாளையம் பகுதியில் குடியரசு தினத்தையொட்டி நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, சிறப்பு பார்வையாளராக கலந்துகொண்டார்



ஈரோடு மாவட்டம், பெருந்துறை, திருவாச்சி ஊராட்சி, மாதம்பாளையம் பகுதியில் நேற்று (26.01.2026) குடியரசு தினத்தையொட்டி ஊர் பெரியவர் லட்சுமியம்மாள் தலைமையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி. சிறப்பு பார்வையாளராக கலந்துகொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

நேற்றைய தினம் குடியரசு தினத்தையொட்டி பெருந்துறை, திருவாச்சி ஊராட்சி, மாதம்பாளையம் பகுதியில் கிராம சபை கூட்டம் நடைபெற்று வருகிறது. கிராம சபை கூட்டத்தின் முக்கிய நோக்கமானது ஜனநாயக ரீதியாக அரசு சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அப்பகுதி இளைஞர்கள், பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதாகும். இக்கிராம சபை கூட்டங்களில் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குட்பட்ட குக்கிராமங்களின் செலவு மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித்திட்டப்பணிகள் ஆகியவை பொதுமக்களிடம் எடுத்துரைக்கப்படும். மேலும், அரசு சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு விபரம் குறித்தும் அறிவிப்பு வரவு கணக்குகள், பலகை வைத்து வெளிப்படை தன்மையுடன் நடத்தப்படுகிறது. நாம் ஒவ்வொரு சமுதாயத்திலும், ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு நபரும் ஜனநாயகம் பற்றி பேசிட வேண்டும். ஜனநாயத்தை காத்திட வேண்டும்.

நேற்றைய தினம் "பெண் குழந்தைகள் காப்போம். பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்", "தொழுநோய் ஒழிப்பு" விழிப்புணர்வு உறுதிமொழிகள் எடுக்கப்பட்டுள்ளது. உறுதிமொழியின் முக்கியநோக்கமானது. நம் வீட்டை சுத்தமாக வைத்திருப்பது போல நம்மை சுற்றியுள்ள கிராம பகுதிகளை நாம் தூய்மையாக வைத்திட வேண்டும் எனவும். எய்ட்ஸ் நோய் பரவுவதை தடுத்திடும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்துதலும், பெண் குழந்தைகளை பாதுகாத்து அவர்களுக்கு, நல்ல கல்வி அளித்து பெண் குழந்தைகளை சமுதாயத்தில் உயர் அலுவலர்களாக உயர்திட வேண்டும் என்பதாகும் மேலும், பெண் குழந்தைகள் படித்து உயர்கல்விக்கு செல்லும்போது அவர்களுக்கு மாதம் ரூ.1000 கல்வித் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் உயர்கல்விக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நாம் அனைவரும் நம் குழந்தைகளை உயர்கல்வி படிக்க வைத்து, நம் நாட்டை மற்ற நாட்டிற்கு முன்னுதாரணமாக மாற்றிட அனைவரும் முன் வர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். இக்கூட்டத்தில், உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன்சௌதரி, , வேளாண்மை இணை இயக்குநர் சிவக்குமார். மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா, துணை இயக்குநர் (தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை) குருசரஸ்வதி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி, பெருந்துறை வருவாய் வட்டாட்சியர் ஜெகநாதன் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (26.01.2026) 46 புதூர், ஆனக்கல்பாளையம், ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில், சிறப்பாக பணியாற்றிய காவலர்களுக்கு பதக்கங்களை அணிவித்து, கௌரவித்தார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா உள்ளார்.

# கீழக்கோட்டையில் குடியரசு தினப் பெருவிழா கொண்டாட்டம்



காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் குடியரசு தினப் பெருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி முன்னிலை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி வரவேற்புரை ஆற்றினார். தலைமையாசிரியை தெய்வானை தேசியக்கொடியை ஏற்றி வைத்து குடியரசு தின சிறப்புரையாற்றினார். நூற்றுக்கு மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகளுக்கு தேச தலைவர்கள் காந்தியடிகள் ஜவஹர்லால்நேரு சுபாஷ்சந்திரபோஸ் வ. உ. சிதம்பரனார் பாரதியார் வேலுநாச்சியார் ஆகியோரின் முகமூடி அணிவிக்கப்பட்டு தேச தலைவர்களின் தியாகம் மிகுந்த வாழ்க்கை வரலாறு விளக்கப்பட்டது. மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. மாணவி தன்ஷிகா குடியரசு தின செய்தி வழங்கினார். மாணவிகள் நந்திகா சிவப்பிரியா தனுஷ்கா கவிதை வாசித்தார்கள். மாணவன் பிரதாப் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். பள்ளி மேலாண்மை குழு மேனாள் தலைவர் சித்ரா உறுப்பினர்கள் தூய்மை பணியாளர் சத்யா பெற்றோர்கள் பழைய மாணவர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள்.

# நாகம்பட்டி சுங்கச் சாவடியில் நடைபெற்ற குடியரசு தின விழா கொண்டாட்டம்




கிருஷ்ணகிரி மாவட்டம்நாகம்பட்டி சுங்கச் சாவடி:மில் 77-வது குடியரசு தின விழா கொண்டாட்டம்

நாகம்பட்டி சுங்கச் சாவடியில் 2026-ஆம் ஆண்டு குடியரசு தின விழா மிகுந்த தேசபக்தியுடனும் உற்சாகத்துடனும் கொண்டாடப்பட்டது. விழாவின் முக்கிய நிகழ்வாக தேசியக்கொடி ஏற்றி மரியாதை செலுத்தப்பட்டது.

கொடிக்கம்பத்தைச்சுற்றிஅழகானவண்ணங்களில் ரங்கோலி (கோலம்) வரையப்பட்டு, மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது தேசத்தின் கலாச்சாரத்தைப் பறைசாற்றியது.

சுங்கச் சாவடி ஊழியர்கள், மேலாளர்கள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் என அனைவரும் இணைந்து இவ்விழாவைச் சிறப்பித்தனர். பல ஊழியர்கள் சீருடையிலும், சிலர் பாரம்பரிய உடைகளிலும் பங்கேற்று ஒற்றுமையை வெளிப்படுத்தினர்.

அலங்காரங்கள்: விழா நடைபெறும் இடம் முழுவதும் வண்ணத் தோரணங்களாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது. இந்த குடியரசு தின விழா கொண்டாட்டம் நமது நாட்டின் பெருமையைக் கண்டுஅனைத்து பேருந்து ஓட்டுநர் நடத்துனர்களை மிகவும் மகிழ்வடைந்தனர்

# ஒரத்தி மாதேவர் ஆலயம் வருஷாபிஷேக விழா நடந்தது



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் நெ.84 ஒரத்தி கிராமம் அருள்திரு பர்வதாம்பிகை உடனாய அருள்மிகு பரசுராமேஸ்வரர் என்கிற ஒரத்தி மாதேவர் ஆலயத்தில் வருஷாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. அருள்திரு பர்வதாம்பிகை உடனாய அருள்மிகு பரசுராமேஸ்வரர் என்கிற ஒரத்தி மாதேவர் ஆலயத்தில் முதலாம் ஆண்டு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா நிறைவு பெற்று வருஷாபிஷேக விழா நேற்று சுவாமிக்கு அபிஷேகம் அலங்காரம் ஆராதனையும் ஸ்ரீ பர்வதாம்பிகை ஸ்ரீ பரசுராமேஸ்வரருக்கு திருக்கல்யாணம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு தீபாராதனை காண்பிக்கப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் அதனைத் தொடர்ந்து இரவு 8.00 மணிக்கு ஸ்வாமி மாடவீதி வலம் வந்து சுவாமி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை

முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ப்ளூ மெட்டல் உரிமையாளர் ஓ.பி.சி.மாறன் செய்திருந்தார். இதில் ஆலய நிர்வாகிகள் மற்றும் ஆலய அர்ச்சகர் விழாக்குழுவினர் கிராம பொதுமக்கள் இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஓமலூர் அருகே உள்ள தொளசம்பட்டி அப்ரமேய பெருமாள் கோவில் தேர் திருவிழா



சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள தொளசம்பட்டி அப்ரமேய பெருமாள் சுவாமி தேரோட்டம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் 25.01.26 துவங்கியது. நூற்றாண்டு பழமையான, துளசி அலமேலு மங்கா சமேத அப்ரமேய பெருமாள் சுவாமி தேரோட்டம் திருவிழா கடந்த, 21ல் கொடியேற்றத்துடன் துவங்கியது. தினமும் பல்வேறு அலங்காரத்தில் சுவாமி அருள்பாலித்தார். 24ல் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது. 25.01.26 காலை சுவாமி ரதம் ஏறும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாலை, 6:30 மணிக்கு ஊர் முக்கியஸ்தர்களுக்கு சிறப்பு செய்யப்பட்டு, முதல் நாள், இரண்டாம் நாள் தேர் நிலைபெறும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து, தேரை நிலைபெயரச் செய்தனர்.

மூன்றாம் நாள் தேரோட்டம், தேர் நிலை சேருதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. தேரில் துளசி அலமேலு மங்கா சமேத அப்ரமேய பெருமாள் சுவாமி சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலித்தார். இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (26.01.2026) 46 புதூர், ஆனக்கல்பாளையம், ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில், தேசிய கொடியினை ஏற்றி வைத்தார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன் சௌதரி உட்பட பலர் உள்ளனர்.

# துர்நாற்றம் வீசும் ஆரூர்பட்டி ஏரி; நடவடிக்கை எடுக்குமா மாவட்ட நிர்வாகம்?



சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் இருந்து ஜலகண்டாபுரம் செல்லும் வழியில் பனங்காட்டுமேடு முதல் ஆரூர்பட்டு ஏரி பேருந்து நிறுத்தம் வரை ஏராளமான இறைச்சி கழிவுகள் மற்றும் மருத்துவமனையில் இருந்து வெளியேறும் கழிவுகள் கொட்டப்பட்டு மிகுந்த துர்நாற்றம் வீசுகிறது மேலும் காற்று மாசு அடைகிறது முக்கியமாக நெடுஞ்சாலை ரோட்டில் நடைபாதையை ஒட்டியே கழிவுகள் தேங்கி கிடப்பதால் பொதுமக்களுக்கு நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளது பொது மக்களின் சுகாதாரம் நலன் மற்றும் ஆரோக்கியம் நலன் கருதி கழிவுகளை முறையாக அகற்றி வேண்டும் என்று சமூக ஆர்வலர் k. சசிகுமார் மற்றும் ஊர் பொதுமக்கள் சார்பாக மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனு அளிக்கப்பட்டது உடனேடியாக கழிவுகளை முறையாக அகற்றி சீர் செய்து தர வேண்டும் என்பது அப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (26.01.2026) 46 புதூர், ஆனக்கல்பாளையம், ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில், தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, சுதந்திரப்போராட்ட தியாகிகள் மற்றும்அவர்தம்வாரிசுதாரர்களைகௌரவித்தார்.உடன்மாவட்டகாவல்கண்காணிப்பாளர் அ.சுஜாதா உள்ளார்.



77 வது குடியரசு தினம் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்நிலையில் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது அலுவலகத்தில் தேசிய கொடியை ஏற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் உள்ள குமரி பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் தேசிய கொடியை ஏற்றி இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்டத் தலைவர்கள் kt உதயம் நவீன் குமார் மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மேலகரம் பேரூராட்சி செயலாளர் அமானுல்லா சிறந்த பேரூராட்சி செயல் அலுவலருக்கான பாராட்டுச் சான்றிதழை மாவட்ட ஆட்சியரிடம் இருந்து பெற்றார்.



இந்திய நாட்டின் 77 வது குடியரசு தினத்தை முன்னிட்டு சேலம் மாவட்டம் ஓமலூர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் சார்பாக தேசியக்கொடி ஏற்றப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஓமலூர் தாலுகா வழக்கறிஞர் சங்கத் தலைவர் P.S. சுந்தர்ராஜன், ஓமலூர் வழக்கறிஞர் சங்கத் தலைவர் ஞானசேகரன் மற்றும் வழக்கறிஞர்கள், நீதிமன்ற அதிகாரிகள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



இந்திய திருநாட்டின் 77 வது குடியரசு தினவிழா தென்காசி மாவட்டம் ஆய்க்குடி பேரூராட்சி மன்ற தலைவர் க.சுந்தர்ராஜன் தலைமையில் நடைபெற்றது. ஆய்க்குடி பேரூராட்சிமன்றதலைவர்க.சுந்தர்ராஜன்தேசியக்கொடிஏற்றிமரியாதைசெலுத்தினார்கள். இந்நிகழ்வில்பேரூராட்சிமன்றதுணைத்தலைவர்ச.மாரியப்பன், 8வது வார்டு உறுப்பினர் வி.விமலா ராணி மற்றும் பேரூராட்சி அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# ஊரக வேலை வாய்ப்பு நூறு நாள் உறுதி திட்டத்தில் நீக்கிய மகாத்மா காந்தியின் பெயரை மீண்டும் வைக்க கோரி ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் காங்கிரஸ் கட்சி மனு



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை (MGNREGA) எவ்வித மாற்றமுமின்றி பழைய வடிவிலேயே அமல்படுத்தக் கோரியும், இத்திட்டத்தின் கீழ் 100 நாட்கள் வேலையை உறுதி செய்ய வலியுறுத்தியும் ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் மனு அளிக்கப்பட்டது.

வேலைவாய்ப்புத் திட்டத்திற்குத் தேவையான முழு நிதியுதவியை மத்திய அரசு உடனடியாக வழங்க வேண்டும்.

இத்திட்டத்தைத் தனியார்மயமாக்கும் அல்லது ஒப்பந்ததாரர்களிடம் ஒப்படைக்கும்முயற்சிகளைக் கைவிட வேண்டும்.

மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிவிட்டு, 'விஜிராம்ஜி' எனப் பெயர் மாற்றம் செய்யும் நடவடிக்கையைத் கைவிட வேண்டும். நாடு முழுவதும் மாவட்ட வாரியாக கிராம சபை கூட்டங்களில் இக்கோரிக்கையை வலியுறுத்த காங்கிரஸ் தலைமை அறிவுறுத்தியுள்ள நிலையில், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி பா.ராஜேஷ் ராஜப்பா தலைமையில் முன்னாள் மாவட்ட தலைவர் டி திருச்செல்வம்,நசியனூர் பேரூராட்சி 8-வது வார்டு கவுன்சிலரும் ஈரோடு வட்டார தலைவருமான எம்.ஆர். நட்ராஜ் ஆகியோர் முன்னிலையில் இக் கோரிக்கை மனுவை ஈரோடு மாவட்ட ஆட்சியர் திரு. ச. கந்தசாமி அவர்களிடம் கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டு நேரில் வழங்கினார்.

இதில் கீழ்க்கண்ட நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர்:

முன்னாள் திருவாச்சி கிராமத்தலைவர் வலசுக்கிட்டு கருமாண்டி செல்லிபாளையம் காங்கிரஸ் கமிட்டி தலைவர் மணி

கதிரம்பட்டி சின்னுசாமி, நசியனூர் சுப்பிரமணி ,மண்டல தலைவர் மாமரத்துபாளையம் எஸ் கோபி

ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப்பிரிவுதலைவர் ம. முகமது அர்சத்

ஈரோடு மாவட்ட காங்கிரஸ் நெசவாளர் அணி தலைவர் சி. மாரிமுத்து,சின்னியம்பாளையம் அர்த்தநாரி, ஈரோடு மாநகர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் சித்தோடு எஸ். பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர். ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை முன்னிறுத்தி காங்கிரஸ் கட்சி முன்னெடுத்த இந்த நடவடிக்கை அப்பகுதியில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

# வேப்பூர் சாய் அப்போலோ கல்வி நிறுவனத்தில் 77வது குடியரசு தின விழா



கடலூர் மாவட்டம் வேப்பூர் சாய் அப்போலோ கல்வி நிறுவனத்தில் 77-வது குடியரசு தின விழா கல்லூரி நிறுவனர் டாக்டர் ஏ. ஆர். தங்கதுரை தலைமையில் உற்சாகமாக நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் அன்பரசி வரவேற்ற இவ்விழாவில், வேப்பூர் வட்டார மருந்து வணிகர்கள் சங்க செயலாளர் கொளஞ்சியப்பர் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இணை இயக்குனர் சண்முகப்பிரியா, பாவா மெடிக்கல் சாகுல் ஹமீது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினர்களாக அரிமா சங்கத் தலைவர் சபியுல்லா, அரிமா சங்க துணைத் தலைவர் பிச்சப்பிள்ளை மற்றும் தே.மு.தி.க நிர்வாகி கலைச்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு மாணவ-மாணவிகளுக்குப் பரிசுகளை வழங்கினர்.

கல்லூரி விரிவுரையாளர்கள், மேலாளர் பிரவீன் குமார் உள்ளிட்டோர் பங்கேற்ற இந்நிகழ்வை சிவரஞ்சனி ஒருங்கிணைக்க, விரிவுரையாளர் கனிமொழி நன்றியுரை ஆற்றினார்.



ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3ல் தூய்மை பணியாளர்களின் குறை தீர்க்கும் கூட்டம் ஈரோடு மாநகர் செங்குந்தர் பகுதியில் உள்ள SAK பாரத் மஹால் நடைபெற்றது.இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஈரோடு மாநகராட்சி 3 வது மண்டல தலைவர் ப. சசிகுமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மேலும் இந்த நிகழ்வில் துப்புரவு ஆய்வாளர்கள் , வார்டு மேஸ்திரிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள சேப்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் தெரசி தலைமையில், 77 வது குடியரசு தினத்தை முன்னிட்டு பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவரும் முன்னாள் கவுன்சிலருமான ஏழுமலை மூவர்ண தேசிய கொடியை ஏற்றி வைத்து மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ், கேடயம் மற்றும் பரிசுகள் வழங்கினார். உடன் பீடிஏ துணைத் தலைவர் இருசமுத்து, உதவி தலைமை ஆசிரியர், பள்ளி மேலாண்மை குழு தலைவர், ஆசிரியர்கள் ஆகியோர் உள்ளனர்.



ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் நேற்று நாட்டின் 77 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையேற்று தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.இந்த நிகழ்வில் துணை மேயர் செல்வராஜ் , ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பத் ஜெயின், துணை ஆணையர் தனலட்சுமி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.